# பிளானெட்டியூட்டர் நிறுவனத்தின் 'இன்டலெட் 2009' விழா




**கோவை, ஜூன் 1-**

பிளானெட்டியூட்டர் நிறுவனத்தின் சார்பில், 'இன்டலெட்-2009' என்ற மூதலாமாண்டு விழா, ஆர். எஸ்.புரம் ராஜஸ்தானி சங்கத்தில் நடந்தது. இதில், பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன.

பிளானெட்டியூட்டர் நிறுவனம், அமெரிக்காவை தலைமையிடமாக கொண்டது. இந்நிறுவனம், கோவையில் ஆரம்பிக்கப்பட்டு, ஓராண்டு நிறைவடைந்ததையொட்டி, 'இன்டலெட்-2009' என்ற விழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவை, 'டிவி' நிகழ்ச்சி தொகுப்பாளர் பிரதீப் துவக்கி வைத்தார். நிர்வாக அதிகாரி சக்திவேல் வரவேற்றார்.

விழாவில், பி.எல்.எஸ்., அகடமி துவக்கப்பட்டு, கல்வி குறித்த சாப்ட்வேர் அறிமுகப்படுத்தப்பட்டது. பள்ளி மாணவர்களுக்கு, ஓவியம், கட்டுரை, நடனம், பாட்டு உள்ளிட்ட பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டன. 'யார் மனசுல யார், அவருக்கு என்ன பெயர்' என்ற போட்டியை, 'டிவி' நிகழ்ச்சி தொகுப்பாளர் பிரதீப் நடத்தினார். போட்டியில் குழந் தைகள் மூதல் பெரியவர்கள் வரை பங்கேற்றனர்.

மாலையில் நடந்த விழாவில், மூதன்மை அதிகாரி சாஜிதாஸ் வரவேற்றார். ஜி.ஆர்.ஜி., கல்வி நிறுவன செயலாளர் நந்தினி குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார். காலை மூதல் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.